மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆலங்குடி

அசல் வழக்கு எண். **75 /2020**

2024-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 -ஆம் நாள் 1872ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின்படி வாதி பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | தந்தை/கணவர் பெயர் | தங்கராசு |
| கிராமம் | : | பூவரசகுடி | தாலுகா | ஆலங்குடி |
| சமயம் | : | இந்து | மாவட்டம் | புதுக்கோட்டை |
| வயது. | : | 46 | தொழில் | அரசு மதுபான கடை விற்பனையாளர் |

நாள் : 19.12.2024

வா.சா. 1

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னவைதான். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 9.11.2017 அன்று வாதிக்கு1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரத்தின் அசல் வா**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 8.2.2002 அன்று அடைக்கலம் என்பவரிடம் இருந்து தாவா சொத்தினை 1-ம் பிரதிவாதி கிரையம் பெற்றதற்கான ஆவணத்தின் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட வா**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 24.5.2018 அன்று தாவா சொத்திற்கு வாதி பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவின் நகல் வா**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 26.8.2018 தேதியிட்ட தாவா சொத்திற்கு வாதி பெயரில் உள்ள நத்தம் நிலவரித் திட்ட தூய அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் வா.சா.ஆ.**4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 26.8.2018 தேதியிட்ட தாவா சொத்திற்கு வாதி பெயரில் உள்ள நத்தம் நிலவரித் திட்ட தூய சிட்டா பதிவேட்டின் உண்மை நகல் வா.சா.ஆ.**5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 02.12.2020 தேதியிட்ட வாதி வல்லாத்திராக்கோட்டை காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் கையிருப்பு நகல் வா.சா.ஆ.**6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 19.12.2020 மற்றும் 20.01.2024 அன்று வாதி செலுத்திய வீட்டு ரசீதுகள் (எண்ணிக்கை - 2) வா.சா.ஆ.**7**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 19.12.2024 தேதியிட்ட வாதி செலுத்திய மின்கட்டண ரசீது வா.சா.ஆ.**8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வழக்குரையில் கண்டுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )